பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 12 புதன்கிழமை (28-08-1991) UTHAYAN — A Livaly National Tamil Daily கதிர்: 267

# நேரடியாக அழைத்தால் தொண்டா வருவாராம்!

## புலிகளின் கருத்தை எதிர்பார்க்கிறார்

கொழும்பு, ஆகஸ்ட் 28

"விடுதலைப் புலிகள் என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, தங்கள் நோக்கம் குறித்துத் தெளிவுபடுத்தினால், யாழ்ப்பாணம சென்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினரைச் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன்."

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் உல்லாசப் பயணத்துறை, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான்.

"ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவைப் பொறுத்தே எனது முயற்சி அமைந்திருக்கும்." — என்றார் அவர்.

அரச சார்புடைய கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வருடம் மோதல் ஆரம்பித்த காலம் தொட்டே சமரசத்தை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளள தாம் முயன்று வந்ததாகவும்—

கடைசியாக இப்போது

[2 ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டில் விரைவில் பாரிய ராணுவ நடவடிக்கை

### வடபகுதி தளபதி 'கொப்பே' தகவல்

வடக்கே—யாழ் குடாநாட்டில் — பெரியதொரு இராணுவ நடவடிக்கை மிகவிரைவில் மேற்கொள்ளப்படும்.

வடபகுதிக்கான இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ கடந்த வார இறுதியில் வவுனியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இத்தகவலை வெளியிட்டார் என்று கொழும்பு தமிழ் பத்திகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா செயலகத்தில் நடைபெற்ற அரச உயரதிகாரிகளின் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டாராம்! [உ-த]

## பிரான்ஸில் இருக்கும் கிட்டு பிரிட்டன் வரத் தடை!

கொழும்பு, ஆக. 28

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமாரை (கிட்டு) மீண்டும் தனது நாட்டினுள் பிரவேசிப்பதைத் தடுக்கும் உத்தரவை பிரிட்டிஷ் அரசு பிறப்பித்துள்ளது

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

திரு. கிட்டு கடந்த வாரம் பிரான்ஸ் சென்று விட்டார் என்று அறிக்கைகள் தெரிவிப்பதாகக் கூறிய அந்த அதிகாரி, அவர் பற்றிய வேறு தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றும் சொன்னார்.

போலி தஸ்தாவேஜுக்களைப் பாவித்தே திரு. கிட்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ் உட்பட பல மேற்கு நாடுகளை இந்தியா புலிகளுக்கு எதிராகத் தூண்டுகிறது!

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும்படி பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ் உட்பட பல மேற்கு நாடுகளை இந்தியா கேட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்களை ஆதாரங் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக இந்தியா தனது பிரதிநிதிகளை இந்நாடுகளுக்கு அனுப்பியுள்ளதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் கோரிக்கையைத் தொடர்ந்துதான் திரு. கிட்டுவை வெளியேறும்படி பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான தமது கோரிக்கை குறித்து மேற்கு நாடுகள் காட்டும் அக்கறை ஊக்கமளிப்பதாக இருப்பதாக இந்திய ராஜதந்திரிகள் கூறினர். [உ-எ]

## அரசின் பிரதிநிதிகளாக தொண்டா, பிரட்மன்!

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் ஆரம்பமானால் அத்தகைய பேச்சுக்களை நடத்த அமைச்சர் தொண்டமானையும் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனையும் பயன்படுத்தவே அரசு விரும்புகின்றதாம்!

நம்பத்தகுந்த வட்டாரங்களை ஆதாரங்காட்டி 'சண்டே ஐலண்ட்' இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

புதிதாக பேச்சுக்களை நடத்தும் பட்சத்தில் அரசு தரப்பில் அமைச்சர் சாகுல் ஹமீது மீண்டும் வருவதை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் "சண்டே ஐலண்ட்" செய்தி தெரிவிக்கிறது. (உ-எ)

## கிழக்கில் தாக்குதல்

கொழும்பு, ஆக. 28

அட்டாளைச் சேனை பொலீஸ் பாதுகாப்பு தடை முகாம் மீது கடந்த புதன் கிழமை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-த]

## பாடசாலைகள் 2 ஆம் திகதி ஆரம்பம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் 3 ஆம் தவணைக்காக அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இது தொடர்பான கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை கல்வி அலுவலகத்தினால் சகல கோட்டங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பௌத்த பீடங்களின் சார்பில் யோசனை வெளியிடப்படும்

கொழும்பு. ஆக. 28

இனப்பிரச்சினை தீர்வு காண்பதற்கான யோசனை ஒன்று பௌத்த பீடங்களின் சார்பில் வெளியிடப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற "பௌத்த ஆலோசனைக் கவுன்ஸில்" கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இந்தக் கவுன்ஸிலில் சகல மகாநாயக்க தேரர்களும், மகாபோதி சங்கம், பௌத்த இளைஞர் சங்கம் போன்ற பௌத்த அமைப்புகளின் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றார்கள்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கபுரத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் மரணம்!

நேற்று முன்தினம் காலை 5-30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் சிங்கபுர இராணுவ முகாமிலிருந்து வெளியேறி சிங்கபுர வீதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

அவர்களிடமிருந்து—

★ ரீ-81 ரகத் துப்பாக்கிகள் — 2.

★ அதற்குரிய ரவைக் கூடுகள் — 8.

★ நடுத்தர ரவைகள் — 268.

★ துப்பாக்கி எறிகணைகள் — 2.

ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். (உ-5)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு அங்கத்தவர்கள் விவரம்

கொழும்பு, ஆக. 28

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக அமைக்கப்பட இருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சி அங்கத்தவர்களின் எண்ணிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. விவரம் வருமாறு :-

| | |
|---|---|
| ★ ஐ. தே. க. | — 23 |
| ★ சுதந்திரக் கட்சி | — 10 |
| ★ தமிழர் கூட்டணி | — 5 |
| ★ ம. ஐ. மு. | — 1 |
| ★ ஐ. சோ. மு. | — 1 |
| ★ முஸ்லீம் காங்கிரஸ் | — 2 |
| ★ ஈரோஸ் | — 1 |

## அம்பாறை ஊர்காவல் படையினரின் மனைவிமாருக்கும் பரா ராணுவப் பயிற்சி!

கொழும்பு, ஆக. 28

அம்பாறை மாவட்ட எல்லைப் புறக் கிராமங்களில் பணிபுரியும் ஊர்காவல் படையினரின் மனைவியருக்கும் விசேட பரா இராணுவப் பயிற்சி வழங்கப்படவிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆயுதங்களைப் பயன்படுத்தும் விதம் குறித்தும் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக் காலத்தில் ஊர்காவல் படையினருக்கு உதவக்கூடிய வகையில் அவர்களின் மனைவியருக்கும் இராணுவப் பயிற்சி அளிக்க முடிவாகியிருக்கிறது. இத் திட்டத்தை அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரே ஏற்பாடு செய்திருக்கிறார்.

## வடக்கு படை அதிகாரிக்கும் கடத்தலில் தொடர்பு?

கொழும்பு, ஆக. 28

லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான தங்கக் கடத்தல் சம்பவம் தொடர்பாக வட பகுதியில் பணிபுரியும் உயர் இராணுவ அதிகாரி ஒருவரை இரகசியப் பொலீஸார் விசாரணை செய்ய இருக்கின்றனர். கொழும்பில் பொலீஸ் வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக இராணுவ மேஜர் ஒருவரும் லெப்டினன்ட் ஒருவரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த லெப்டினன்ட் வட பகுதியில் பணிபுரிந்து வந்த போது முன் அனுமதி பெறாமலே சிங்கப்பூர் சென்றார் என்று தற்போது தெரிய வந்திருக்கிறது.

இது தொடர்பாகவே வட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சுவிஸ் சமஷ்டி முறை இங்கு பொருத்தமானதல்ல!

### அந்நாட்டு தூதுவர் சொல்கிறார்

கொழும்பு, ஆக. 28

எங்கள் நாட்டின் சமஷ்டி முறை இலங்கைக்கு உகந்தது, பொருத்தமானது என்று சொல்லமுடியாது. அது இன்னொரு நாட்டுக்கு மாற்றக் கூடியதல்ல.

இவ்வாறு கொழும்பில் உள்ள சுவிஸ் தூதுவர் திரு. அன்ட்ரே கிரபெனரீட் தெரிவித்துள்ளார்.

கண்டியில் உள்ள அடிப்படை கல்வி நிறுவனம் நடத்திய வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுவிஸ் சமஷ்டி அமைப்பு இலங்கைக்கு உகந்ததா? ஒத்து வருமா, என்று பலரும் என்னிடம் அடிக்கடி கேட்கிறார்கள். ஆனால் எமது சமஷ்டி அமைப்பு முறை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் தொடர்ந்து குண்டு வீச்சுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 28

மணலாறுப் பகுதியில் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது ஸ்ரீலங்கா விமானங்கள் தொடர்ந்து குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் அவ்ரோ விமானம் ஒன்றுகொக்கிளாய், நாயாறுப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மீது ஆறு பீப்பாய்க் குண்டுகளை வீசியதாகவும்—

நேற்றுக் காலையிலும் அப்பகுதியில் பொம்மர் குண்டு வீச்சு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று பொம்மர்கள் அலம்பில், செம்மலை, மணலாறு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை பதினைந்துக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன.

இத் தாக்குதல்களை அடுத்து இப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருவதாகத் தெரியவருகிறது. (உ-5)

## வடக்கே வர வவுனியாவில் காத்திருக்கும் லொறிகள்

வவுனியா மூன்று முறிப்பு (சர்வோதய) இராணுவத் தடை முகாமில் சுமார் 100 லொறிகள் உணவுப் பொருள்களுடன் காத்து நிற்கின்றன.

வடக்கே வருவதற்கு இயலாத நிலையில் கொழும்பு. அனுராதபுரம் பகுதிகளிலிருந்து புறப்பட்டு வந்த லொறிகளே இவ்வாறு காத்து நிற்பதாகத் தெரியவருகிறது. [அ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## தேவை

எலுமிச்சை, மா போன்ற நாற்றுக்கள் உண்டுபண்ணக் கூடிய வெற்றுத் தகரப் பேணிகள் மற்றும் ஜாம் போத்தல்கள், ஜாம் போத்தல் மூடிகள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங்கம். கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-0390]

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி/0396]

## ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)


## பரீட்சை குறித்து கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், ஆக. 28

வடக்கில் நடத்தப்படாதிருக்கும் ஜி. சீ. ஈ. உயர் தர சாதாரண தர மற்றும் ஏனைய பரீட்சைகள் தொடர்பாக பேச்சு நடத்த வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் சில தினங்களில் கொழும்பு செல்ல விருப்பதாகத் தெரியவருகிறது. (உ-5)

## நேரடியாக..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தான் புலிகள் தமது முயற்சியை கவனத்தில் எடுத்திருப்பது போல் தெரிகிறது என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில்—

மற்றொரு ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியில் ''வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக எதையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன்''— என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

''விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தைச் சந்திப்பதற்காகவும், சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவும் யாழ்ப்பாணம் செல்லத் தயாராக இருக்கிறீர்களா?'' என்ற கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்திருக்கிறார்.

இக்கேள்விக்கு அவர் நேரடியாகப் பதில் அளிக்கவில்லை.

''வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். எரிந்து கொண்டிருக்கும் தமிழர் பிரச்சினைக்காக எந்த நடவடிக்கையை எடுக்கவும் நான் தயாராக இருக்கிறேன்'' — என்றார் அவர்.

''வடக்கு - கிழக்கு சண்டை காரணமாக மலையக இளைஞர்களும் துன்பப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம் அல்லது கொழும்பில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுவிட்டால் மலையகத்தில் இளைஞர்கள் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்படுகிறார்கள்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சண்டையை முடிவுக்குக் கொண்டுவர நான் திடசித்தம் கொண்டுள்ளேன்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசுக்கு உதவும். இக்குழுவின் பெறுபேறுகளைப் பார்க்க நான் பொறுத்திருப்பேன்.

நாம் அவசரப்படக் கூடாது.''

— இப்படி அவர் அந்தப் பேட்டியில் மேலும் கூறினார். [உ-எ]

# மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு
## வடக்கு - கிழக்கு மாகாணசபை
# பதவி வெற்றிடம்

**11 ஆம் தர கிராம அலுவலர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளல்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது இருக்கும் 11 ஆம் தர கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ் வரும் 3ஆம், 4ஆம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள தகைமைகளை உடைய இருபாலார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தற்போதுள்ள வெற்றிடங்கள் சம்பந்தமான விவரங்களை யாழ். மாவட்டத்தில் உள்ள எல்லாப் பிரதேச செயலாளர் / உப அரச அதிபர்கள் அலுவலகங்களிலும், செயலகத்தின் பரிபாலனக் கிளையிலும், இத்துடன் கொடுக்கப்படும் விளம்பரத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

02.. சம்பளத்திட்டம் ரூபா 25,200/- க்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுடன் வருடத்திற்கு ரூபா 19,680-9 x 480-8 x 500-28,000/- நியமனம் பெறுவதற்கு முன்னர் பயிற்சிக் காலத்தில் எல்லாப் படிகளும் உட்பட, மாதமொன்றுக்கு 250/- ரூபா கொடுப்பனவாகச் செலுத்தப்படும்.

03. வயதெல்லை விண்ணப்பம் ஏற்கும் தினத்தன்று 21 வயதிற்கு குறையாத 40 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். நிரந்தர அரச சேவையிலுள்ளோருக்கு குறிப்பிட்ட வயதெல்லை தடையாக அமையாது.

04. கல்வி அல்லது பிற தகைமைகள்:-

(1) சிங்களம் அல்லது தமிழ், எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட ஆகக் குறைந்த தகைமையாக இரு திறமைச் சித்திகள் உட்பட சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது,

(2) சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய ஒன்றில் சித்தியுட்பட, இரு திறமைச் சித்திகளுடனும், (சா/த) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது, பெற்றுக் கொண்ட க. பொ. த. ப. சாதாரண தராதரப்பத்திரம் அல்லது,

(3) முதன் மொழி - கணிதம் உட்பட, பி. பிரிவு சித்தி இரண்டு (02) உட்பட தேசிய கல்வித் தராதரப் பரீட்சையில் சித்தி.

குறிப்பு:-

(1) அரசாங்கப் பண்ணை ஒன்றில் பயிற்சி பெற்றுள்ளவராக அல்லது மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு அல்லது அரச பெருந்தோட்டம், கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஏதேனும் பெருந்தோட்டத்தில் அல்லது பண்ணையில் 5 வருடங்களுக்கு குறையாத ஒரு காலப்பகுதிக்கு வெளிக்கள சேவையில் ஈடுபட்டுள்ளதாக அல்லது க. பொ. த. (சா/த) பரீட்சையில் அல்லது தே. பொ. த. க. பரீட்சையில் கமத்தொழில், தாவரவியல் அல்லது விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்துள்ளதாக கூறும் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கும் தேர்வு நாடிகளுக்கு விசேஷ முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு (2)

மேலே (1) ஆம் பந்தியில் கூறப்பட்டவாறாக க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஏதேனும் பாடத்தில் சாதாரண சித்தியெய்தியுள்ள ஒரு தேர்வு நாடி க. பொ. த. (உ/த.) பரீட்சையில் அதே பாடத்தில் சாதாரண சித்தியெய்தியிருந்தால், க. பொ. த. (சா/த) பரீட்சையில் அவர் பெற்ற சித்தி திறமைச் சித்தியாகக் கருதப்படும்.

(அ) i விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii மிகவும் சிறந்த குணமுடையவராக இருத்தல் வேண்டும்.
iii கிராம உத்தியோகத்தர் ஒருவரின் கடமைகளைப் புரிவதற்கு உடற்றகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு (3)

சிங்களம் பேசக்கூடிய கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி சிங்கள மொழியாலும், தமிழ் பேசக் கூடிய கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமிழ் மொழியிலும் க. பொ. த. (சா/த.) அல்லது சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் அவசியம்.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் கடைசி தினத்திற்கு முன்னர் ஆறு வருட காலத்திற்கு விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் கிராம அலுவலர் பிரிவில் அல்லது அப்பகுதிக்கு அருகாமையில் உள்ள கிராம அலுவலர் பிரிவில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது நிரந்தர வதிவிடமாக உள்ளவர் என அத்தாட்சி படுத்த வேண்டும். குடும்ப அட்டவணை தேர்தல், அட்டவணை அல்லது பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் வதிவிடம் சம்பந்தமான பத்திரம் மூலம் அத்தாட்சி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(11) விண்ணப்பதாரி வெற்றிடமுள்ள மாவட்டத்தில் பிறந்த அல்லது நிரந்தர வதிவிடமாகவுள்ளவராக இருப்பதோடு தமது பெற்றோர் இடமாற்றம் காரணமாக வதிவிடம் வேறுபட்டு எமது வதிவிடம் சம்பந்தமாக அத்தாட்சி சமர்ப்பிக்க ஏதுவாயில்லாத விண்ணப்பதாரிகளுக்கு, அவ் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடமாக தமது தாய் அல்லது தந்தை, பிறந்த இடம் அல்லது தமது துணைவர்/துணைவி வசிக்கும் இடமாகக் கொள்ளலாம்.

05. தோந்தெடுக்கும் முறை:

(1) எல்லாப் புதிய தோந்தெடுப்புகளும் 11 ஆம் தர கிராம அலுவலர் பதவிக்காகும்.

(2) பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும் எழுத்து மூலம் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய தகுதி உடையவர்கள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். இப் பரீட்சைக்கான பாட விதானம் ''அ'' இணைப்பில் உள்ளது. இப் பரீட்சை நடாத்தப்படும் திகதி பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்படும்.

(3) கிராம அலுவலர் பதவிக்கு வெற்றிடமுள்ள பிரிவில் நிரந்தர வதிவிடமுள்ளவரோ அல்லது அதற்கு அருகாமையிலுள்ள கிராம அலுவலர் பிரிவில் வசிப்பவரோ மாத்திரம் விண்ணப்பிக்கலாம். தோந்தெடுக்கப்படும் போது வெற்றிடமுள்ள கிராம அலுவலர் பிரிவில் வசிப்பவருக்கு முதலிடம் அளிக்கப்படும். வெற்றிடமுள்ள கிராம அலுவலர் பிரிவில் போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதென பொதுச் சேவை ஆணைக்குழு திருப்தி அடையும் இடத்து அருகாமையிலுள்ள கிராம அலுவலர் பிரிவில் உள்ள விண்ணப்பதாரிக்கு எழுத்துப் பரீட்சைக்கு அனுமதிப் பத்திரம் அனுப்பாமல் விட இடமுண்டு.

06. விண்ணப்பப்பத்திரம்:

(1) கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய 8''x11½'' கடதாசியில் இடதுபக்கத்திலும் (1 முதல் 11 வரை 1ஆம் பக்கம் 12—16 வரை இரண்டாம் பக்கம்) அமைய தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் 1991 - 09 - 30 ஆம் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக மாவட்டச் செயலாளர், செயலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 11ஆம் தர கிராம அலுவலர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளல் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) பரீட்சை நடைபெறும் இடமும், மாவட்டமும்-
யாழ்ப்பாணம்- யாழ்ப்பாண மாவட்டம்.

(3) விண்ணப்பதாரியின் மீள வழங்கப்படாத 100/- ரூபா கட்டணத்தை யாழ்ப்பாண மாவட்ட ஆணையரும், அரச அதிபர் என்ற விலாசத்திற்கு வைப்புக்கணக்கு/ நானாவிதம் என்ற தலைப்பில் யாழ்ப்பாணச் செயலகத்தில் அல்லது யாழ். வைத்தியசாலை வீதி, இலங்கை வங்கியில் பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைக்க வேண்டும். பணம் செலுத்தும் பத்திரம் இச் செயலகத்தின் பரிபாலனக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். சரியாகப் பூரணப்படுத்தப்படாத அல்லது முறையற்ற விண்ணப்பப்பத்திரங்கள் மேல் அறிவித்தல் எதுவுமின்றி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாதென்பதை அறியத் தருகின்றேன். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தமது தகுதியை ஒப்புவிக்க வேண்டும். கிராம அலுவலர் பதவிக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பப்பத்திரங்கள் எழுத்துப் பரீட்சைக்கு முன்னரோ, பின்னரோ தகுதியற்றதாக்க வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது சட்டத்தரணி அல்லது காவற்படை / கப்பற்படை / விமானப்படை ஆகியவற்றின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது பொலீஸ் கெசட் மூலம் அறிவிக்கப்பட்ட ஒரு அலுவலர் அல்லது வருடம் 24,000,00 க்கு குறையாத திரட்டிய சம்பளம் பெறும் ஓர் அரச ஊழியர் உறுதி செய்யலாம்.

அரச உத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்களூடாக அனுப்பப்படல் வேண்டும்.

**கா. மாணிக்கவாசகர்**
யாழ்ப்பாண மாவட்ட செயலாளரும், அரச அதிபரும்,
வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளருக்காக.

செயலகம்,
யாழ்ப்பாணம். 22 - 08 - 1991.

## யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள கிராம அலுவலர் பிரிவுகள்

| பிரதேச செயலாளர் பிரிவு | தொடர் இல. | வெற்றிட கி.அ.பி. இல. | பிரிவு |
|---|---|---|---|
| 01. நெடுந்தீவு | 1 | ஜே/ 4 | நெடுந்தீவு மத்தி |
| | 2 | ஜே/ 6 | நெடுந்தீவு கிழக்கு |
| 02. வேலணை | 3 | ஜே/ 7 | மண்டைதீவு கிழக்கு |
| | 4 | ஜே/ 10 | அல்லைப்பிட்டி |
| | 5 | ஜே/ 11 | மண்கும்பான் |
| | 6 | ஜே/ 13 | வேலணை வடகு, கிழக்கு |
| | 7 | ஜே/ 15 | வேலணை தெற்கு, கிழக்கு |
| | 8 | ஜே/ 17 | வேலணை தெற்கு |
| | 9 | ஜே/ 19 | வேலணை மேற்கு |
| | 10 | ஜே/ 20 | சரவணை கிழக்கு |
| | 11 | ஜே/ 22 | புங்குடுதீவு வடக்கு, கிழக்கு |
| | 12 | ஜே/ 23 | புங்குடுதீவு கிழக்கு |
| | 13 | ஜே/ 25 | புங்குடுதீவு கிழக்கு, தெற்கு |
| | 14 | ஜே/ 28 | புங்குடுதீவு வடக்கு மத்தி |
| | 15 | ஜே/ 30 | புங்குடுதீவு தெற்கு மத்தி |
| | 16 | ஜே/ 31 | புங்குடுதீவு கிழக்கு மத்தி |
| | 17 | ஜே/ 32 | புங்குடுதீவு வடக்கு, மேற்கு |
| | 18 | ஜே/ 36 | நயினாதீவு தெற்கு |
| 03. ஊர்காவற்றுறை | 19 | ஜே/ 37 | அனலைதீவு வடக்கு |
| | 20 | ஜே/ 38 | அனலைதீவு தெற்கு |
| | 21 | ஜே/ 39 | எழுவைதீவு |
| | 22 | ஜே/ 43 | காரைநகர் தெற்கு, கிழக்கு |
| | 23 | ஜே/ 49 | ஊர்காவற்றுறை |
| | 24 | ஜே/ 55 | நாரந்தனை வடக்கு |
| | 25 | ஜே/ 56 | நாரந்தனை வடக்கு-தெற்கு |
| | 26 | ஜே/ 57 | நாரந்தனை |
| | 27 | ஜே/ 59 | சுருவில் |
| 04. நல்லூர் | 28 | ஜே/103 | கந்தர்மடம் வடக்கு, கிழக்கு |
| | 29 | ஜே/127 | கொக்குவில் தெற்கு, மேற்கு |
| 05. யாழ்ப்பாணம் | 30 | ஜே/ 63 | கொழும்புத்துறை கிழக்கு |
| | 31 | ஜே/ 65 | பாஷையூர் மேற்கு |
| | 32 | ஜே/ 67 | திருநகர் |
| | 33 | ஜே/ 71 | குருநகர் மேற்கு |
| | 34 | ஜே/ 72 | சின்னக்கடை |
| | 35 | ஜே/ 75 | சுண்டிக்குளி தெற்கு |
| | 36 | ஜே/ 77 | மருதடி |
| | 37 | ஜே/ 84 | நாவாந்துறை தெற்கு |
| | 38 | ஜே/ 87 | முஸ்லிம் வீதி வடக்கு |
| | 39 | ஜே/ 88 | புது முஸ்லிம் வீதி |
| 06. சண்டிலிப்பாய் | 40 | ஜே/134 | நவாலி வடக்கு |
| | 41 | ஜே/136 | நவாலி தெற்கு |
| | 42 | ஜே/137 | மானிப்பாய் வடக்கு |
| | 43 | ஜே/144 | மாசியபிட்டி |
| | 44 | ஜே/150 | மாதகல் கிழக்கு |
| | 45 | ஜே/154 | மாரீசன் கூடல் |
| | 46 | ஜே/155 | இளவாலை |
| | 47 | ஜே/156 | முல்லானை |
| 07. சங்கானை | 48 | ஜே/159 | சங்கரத்தை |
| | 49 | ஜே/173 | சுழிபுரம் மத்தி |
| | 50 | ஜே/176 | பனிப்புலம் |
| 08. உடுவில் | 51 | ஜே/182 | உடுவில் தெற்கு, மேற்கு |
| | 52 | ஜே/185 | உடுவில் மத்தி, வடக்கு |
| | 53 | ஜே/188 | இணுவில் தெற்கு, மேற்கு |
| | 54 | ஜே/189 | உடுவில் தெற்கு, கிழக்கு |
| | 55 | ஜே/190 | இணுவில் வடக்கு, கிழக்கு |
| | 56 | ஜே/192 | தாவடி தெற்கு |
| | 57 | ஜே/193 | தாவடி கிழக்கு |
| | 58 | ஜே/195 | சுன்னாகம் பட்டணம் வடக்கு |
| | 59 | ஜே/196 | சுன்னாகம் பட்டணம் தெற்கு |
| | 60 | ஜே/198 | சுன்னாகம் பட்டணம் மத்தி |
| | 61 | ஜே/199 | சுன்னாகம் பட்டணம் மேற்கு |
| | 62 | ஜே/200 | கந்தரோடை |
| | 63 | ஜே/202 | ஏழாலை தெற்கு, மேற்கு |
| | 64 | ஜே/206 | ஏழாலை மத்தி |
| 09; தெல்லிப்பளை | 65 | ஜே/212 | மல்லாகம் தெற்கு |
| | 66 | ஜே/216 | விளவெட்டி மத்தி |
| | 67 | ஜே/221 | இளவாலை வடக்கு |

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உலகின் புதிய போக்கு

உலகின் பல பாகங்களிலும் வாழும் சிறுபான்மை இன மக்கள், தத்தமது மொழி, பண்பாடு, சமயம் என்பவற்றைப் பேணி, தனித்துவம் பேணி, சுதந்திரமாக வாழவே விரும்புகின்றனர்.

சனநாயகம்- மக்கள் ஆட்சி- என்ற பெயரில் அடக்கு முறைகளும், அதிகார மேலாண்மைகளும்—

கம்யூனிஸம் — சமதர்மம்— என்ற பெயரில் ஒரே கட்சி ஆட்சியும், அடக்கி ஒடுக்குதல்களும், கட்டாயத் திணிப்புகளும்—

சர்வாதிகாரம் கலந்த ஏதேசாத்திகாரக் கொடுங்கோன்மையும் பரவலாக மலிந்து விட்டதால்—

பல நாடுகளிலும் வாழும் சிறுபான்மை இன மக்கள் பெயருக்குச் சுதந்திரமும், நடைமுறையில் அடிமைகளுமாக வாழ்கிறார்கள். அதனால் அவர்கள் ஏனைய பெரும்பான்மையினருடன் சேர்ந்து வாழாமல், தனித்து வாழ்ந்து சுதந்திரத்தை அனுபவிக்கவும் தமது தனித்துவங்களைப் பேணவும் விரும்புகிறார்கள்.

74 வருடங்களாக சோவியத் யூனியன் அமைப்பில் சேர்ந்திருந்த பல குடியரசுகள் தாம் பிரிந்து சென்று, தனியாக இயங்க விரைவது அதனையே எடுத்துக்காட்டுகிறது.

பூகோள - அரசியல் வசதிகள், மற்றும் ஆட்சியாளர்களின் வசதிகள் கருதி வெவ்வேறு இனங்கள் கூடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டாலும், பல வருடங்கள் சென்றாவது அந்த இனங்கள் தாம் தனித்தனியே வாழ விரும்பும் என்பதை சோவியத் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

சிறுபான்மை இனங்கள் பல நாடுகளில் தனிநாடு கேட்பதும், பிரிந்து செல்லப் போராடுவதும் இப்போது சர்வ சாதாரணமாகி வருகிறது. ஆனால் அவர்களை பல வருட காலமாக சனநாயகம், சமதர்மம் என்ற போர்வையில் அடக்கி ஆண்ட, மேலாதிக்கம் செலுத்திய பெரும்பான்மையினர் அதனை விரும்பாதிருப்பதும், எதிர்ப்பதும் இயல்பே. அதனால் —

சிறுபான்மை இன மக்கள் நடத்தும் தேசிய தளைவிடுவிப்புப் போராட்டங்களை [National Liberation Struggle] பயங்கரவாத இயக்கங்களாகவும், அரச எதிர்ப்பு அல்லது ஆட்சிக் கவிழ்ப்பு போராட்டங்களாகவும் காட்டி அவற்றை அடக்கிவிட முயல்கின்றன.

இலங்கையிலும் அதுவே நடந்து வருகிறது. தமிழர்களின் தேசியதளைவிடுவிப்புப் போராட்டத்தை கொழும்பு அரசாங்கங்கள் பயங்கரவாதமாகவும், அரச எதிர்ப்புப் போராட்டமாகவும் வெளி உலகத்துக்குக் கற்பித்து வருகின்றன.

ஆனால் இந்த ஏமாற்றுவேலை காலவரையறை இல்லாமல் நீடிக்க முடியாது. ஏனெனில் சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய மற்றும் சுதந்திரப் போராட்டங்களை மேற்கு நாடுகள் உட்பட, உலக நாடுகள் ஆதரிக்கும் அரசியல் சூழ்நிலை கனிந்து வருகிறது.

சர்வதேச அரசியல், பொருளாதாரப் பரிமாணங்களில்ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தங்களுக்கு முழுக்கச் சாதகமாகும் வரை தமிழர்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தை மனம் சலிக்காது, முயற்சியைக் கைவிடாது, கோணாது தொடர்வது அவசியமாகிறது. இடையில் தொய்ந்து போகும் நடவடிக்கைகள் பற்றிச் சிந்திக்கவும் கூடாது.

---

பயண அனுமதி பெற

# புதிய படிவத்திலேயே இனி விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஆக. 28

குடாநாட்டில் இருந்து வட பகுதிக்கு வெளியே செல்வதற்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) தொடக்கம் புதிய விண்ணப்பப் படிவத்திலேயே (படிவம் 1) மனுச் செய்ய வேண்டும் என்று — போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தற்போது நடைமுறையிலுள்ள விண்ணப்பப் படிவங்களை வைத்திருப்போர், முதலாம் திகதிக்கு முன்பதாக அவற்றில் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அதன் பின் அவை செல்லுபடியாகா என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் முன்னர் பெற்ற அனுமதி அட்டைகளில் மாற்றம் ஏதும் இருக்காது. அவற்றைத் தற்போதுள்ள நடைமுறைப்படி தொடர்ந்து பயன்படுத்த முடியும் என்றும் —

விண்ணப்பப் படிவம் விற்கும் கடை உரிமையாளர்கள் அவசர அனுமதிவழங்கும் காரியாலயங்களில் தம்மிடமுள்ள விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்து புதிய படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (அ)

## உற்சவ கால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஆக. 28

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் இசை மற்றும் சமய அரங்குகளில் இன்று புதன் கிழமை மாலை இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

கம்பன் கோட்டத்தில்— திருமதி தனலஷ்மி சணநாதலிங்கம், திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள்.

நல்லூர் ஆதீனம் குருமூர்த்தி ஆலயத்தில் — திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் கந்தரனுபூதி பற்றிய தொடர் கதாப்பிரசங்கம்.

நல்லூர் மேற்கு வீதி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் — கானகதாவாரிதி வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தும் இராமாயணத் தொடர் விரிவுரையில் ''பாதுகாபட்டாபிஷேகம்.''

[அ-126]

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 28

நேற்று ஆரம்பமாகவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்ட யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சுகாதாரக் குழுக்களைச் சேர்ந்த சமூகத் தொண்டர்களுக்கான சுகாதாரப் பயிற்சி, இன்று முதல் நான்கு நாட்கள் யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் நடைபெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## துணைவேந்தராக தொடருமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குப் புதிய துணைவேந்தர் ஒருவரைத் தெரிவு செய்யும் வரை தொடர்ந்து இப்பதவியை வகிக்குமாறு பேராசிரியர் அ. துரைராஜா கேட்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் நேற்று கொழும்பிலிருந்து இப்பணிப்புரையை விடுத்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவின் பதவிக் காலம் கடந்த 24ஆம் திகதியுடன் முடிவடைந்தது தெரிந்ததே.

புதிய துணைவேந்தர் பதவிக்கு பேராசிரியர் அ. துரைராஜா, பேராசிரியர் வி. சிவஞானசுந்தரம், பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரின் பெயர்களை யாழ். பல்கலைக்கழக மூதவை தெரிவு செய்து அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

[அ-5]


நல்லூர் உற்சவகால [illegible]

நல்லை வேலா!

கண்ணிரண்டும் உன்னருளே காண வேண்டும்
காலிரண்டும் உன்னடியை நாட வேண்டும்
நம்பினவர் கைவிளக்கே நல்லை வேலா!
நம்வாழ்வை தொல்லை விட்டு ஓடச்செய்வாய்
இன்பமுடன் அமைதியெங்கும் ஓங்கச் செய்வாய்
இந்நிலம் வாழ [illegible]

திருமதி காவேரி [illegible]


---

# இந்திய - பாக். படைகள் காஷ்மீர் எல்லையில் மோதல்

இஸ்லாமாபாத், ஆக. 28

காஷ்மீர் எல்லையில் இந்திய, பாகிஸ்தான் இராணுவத்தினருக்கிடையில் நேற்று இரண்டாவது நாளாக துப்பாக்கிச்சண்டை நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இந்தச் சண்டையில் இந்திய இராணுவ கப்டன் ஒருவரும் இரு சிப்பாய்களும் கொல்லப்பட்டதாகவும், மேலும் இருவர் காயமடைந்ததாகவும் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார்.

(உ-த)

## கோர்பியின் மனைவிக்கு மாரடைப்பு

மொஸ்கோ, ஆக. 28

தனது கணவனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதிப் புரட்சியை அடுத்து திருமதி. ரெய்ஸா கோர்பச்சேவ் சுகவீனமுற்றிருப்பதாக ஜனாதிபதி கோர்ப்பச்சேவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சதிப்புரட்சி தோல்வியடைந்த பின்னர் மாரடைப்பு ஏற்பட்டு திருமதி கோர்ப்பச்சேவ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக சோவியத் தலைநகரில் பேசப்படுவதைப் பற்றி அவரிடம் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## கைதானவர் தெஹிவளையில் வசித்தவராம்

கொழும்பு, ஆக. 28

கொழும்பில் கைதான விடுதலைப் புலிகளின் பிரதம உளவாளி என்று கூறப்படும் நகுலேஸ்வரன் என்பவர் தெஹிவளையில் வசித்து வந்தார் என்றும் — அங்கு ஒரு புத்தகசாலையில் வேலை பார்த்து வந்தார் என்றும் கொழும்புப் பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஜேர்மனியும் அங்கீகரித்தது

பொன், ஆக 28

சுதந்திரப் பிரகடனம் செய்த போல்டிக் குடியரசு நாடுகளான லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகியவற்றை ஜேர்மனியும் அங்கீகரித்தது.

கடந்த பெப்ரவரியில் முதன் முதலாக சுதந்திரப் பிரகடனம் செய்தவித்துவேனியாவை அந்த நேரத்திலேயே அங்கீகரித்த ஐஸ்லாந்து தனது தூதுவரை நேற்று முன்தினம் தலைநகரான வில்னியஸுக்கு அனுப்பி வைத்தது.

அதேசமயம் டென்மார்க் தூதுவர் நேற்று லத்வியாவின் தலைநகரான றீகா வந்து சேர்ந்தார். அங்கிருந்து லித்துவேனியாவிலும் எஸ்தோனியாவிலும் தூதரகங்களை அமைக்க அவர் நடவடிக்கை எடுப்பார். [இ-10]

# தெல்லிப்பளைப் பகுதியில் மீட்பு நிதி பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 28

அடுத்த மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை, காலை 9-00 மணிக்கும், பிற்பகல் 3-00 மணிக்கும் இடையில் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீட்பு நிதி பெறப்பட உள்ளது.

மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் அன்றைய தினம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தெல்லிப்பளை வட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பலாலி மேற்கு, பலாலி கிழக்கு, மயிலிட்டித்துறை, மயிலிட்டி வடக்கு, குரும்பசிட்டி, வயாவிளான், கட்டுவன் மேற்கு, கட்டுவன் கிழக்கு, பளைவீமன்காமம், காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை கிழக்கு, காங்கேசன்துறை மத்தி' மாவிட்டபுரம் தெற்கு, மாவிட்டபுரம் வடக்கு, நகுலேஸ்வரம் கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை மத்தி ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சென்று வேறு இடங்களில் வாழ்வோர் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளரால் கோரப்படுகின்றனர். (இ)

# சடலங்களை நளினி-முருகன் அடையாளம் காட்டினராம்

சென்னை, ஆக. 28

பெங்களூரில் தற்கொலை செய்துகொண்ட சிவராசன், சுபா ஆகியோரின் சடலங்களை ராஜீவ் கொலை தொடர்பாக, ஏற்கனவே கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ள நளினியும், முருகனும் அடையாளங்காட்டினர் என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

(இ-எ)

# சிறிமாவோ குடும்பத்துக்கு எதிராக மகன் ஆட்சேபம்!

கொழும்பு, ஆக 28

சுதந்திரக் கட்சிக்கு பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேராத ஒருவர் தலைமை வகிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கட்சியின் தற்போதைய தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வனும், சுதந்திரக் கட்சி எம். பி.யுமான திரு. அனுரா பண்டாரநாயக்காவே இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அண்மையில் நடந்த சுதந்திரக்கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் திரு. அனுரா பண்டாரநாயக்கா இது தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்துப் பேசினார்.

சுதந்திரக் கட்சிக்கு இனி சிறிமா - அனுரா தலைமை வேண்டாம். பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேராத ஒருவரே கட்சியை இனி வழி நடத்த வேண்டும் என்று திரு. அனுரா பண்டாரநாயக்கா அப்பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினார். (இ-எ)

## முகாமைத்துவ பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ். கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் தரம் இரண்டு, தரம் மூன்று அதிபர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி நெறி எதிர்வரும் இரண்டாம் திகதி முதல் ஆறாம் திகதிவரை நடைபெறவிருக்கிறது. [இ-3]

---

## பௌத்த...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தக் கவுன்ஸிலின் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் காமினி ஜெயசூரிய—

''இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண மகா சங்கம் தனது ஆலோசனையைத் தெரிவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எழுந்து நிற்க வேண்டும். இல்லையேல் 'மகா சங்கத்திடம் ஆலோசனை கேட்டோம்; ஆனால் பதில் வரவில்லை' என்று அவர்கள் பின்னர் கூறுவார்கள்'' — என்று குறிப்பிட்டார்.

அதனையடுத்து—

அரசுக்கு சமர்ப்பிப்பதற்காக யோசனை தொடர்பான தஸ்தாவேஜுக்களைத் தயாரிக்கும்படி அபரபுர நிக்காயாவின் தலைமைக் குருவான வண. மடிகே பஞ்சிசேதரா் கேட்டுக்கொண்டார்.

[உ]

## சுவிஸ்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நீண்ட காலம் சரித்திர மாற்றங்களால், செயல் முறைகளால் உருவான ஒன்று. ஏனைய நாடு ஒன்றுக்கு மாற்றக்கூடியதல்ல,

ஒரு நாட்டுக்கு உகந்ததாகக் காணப்படும் தீர்வு இன்னொரு நாட்டுக்கு ஒத்துவராமல் உகந்ததாக இல்லாமல் போகலாம்; இன்னொரு நாட்டுக்கு அது அழிவையே உண்டாக்கலாம்.

ஆகையால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுவிஸ் முறையிலான சமஷ்டி அரசமைப்பு உகந்தது என்று கூற முடியாது.

ஒவ்வொரு நாடும் தனது பிரச்சினைகளுக்கு ஏற்றவிதத்திலான தீர்வையே காண வேண்டும். — என்றார்.

(அ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

| | | | |
|---|---|---|---|
| | 68 | ஜே/232 | மாவிட்டபுரம் தெற்கு |
| | 69 | ஜே/238 | கட்டுவன் |
| | 70 | ஜே/240 | தென்மயிலை |
| | 71 | ஜே/247 | தையிட்டி கிழக்கு |
| | 72 | ஜே/248 | மயிலிட்டித்துறை தெற்கு |
| | 73 | ஜே/254 | பலாலி வடக்கு |
| | 74 | ஜே/255 | பலாலி வடக்கு, மேற்கு |
| | 75 | ஜே/256 | பலாலி மேற்கு |
| 10. கோப்பாய் | 76 | ஜே/257 | இருபாலை தெற்கு |
| | 77 | ஜே/277 | ஆவரங்கால் மேற்கு |
| | 78 | ஜே/280 | வாதரவத்தை |
| | 79 | ஜே/284 | வளலாய் |
| 11. சாவகச்சேரி | 80 | ஜே/293 | கைதடி மேற்கு |
| | 81 | ஜே/295 | நாவற்குழி கிழக்கு |
| | 82 | ஜே/313 | மட்டுவில் வடக்கு |
| | 83 | ஜே/314 | மட்டுவில் கிழக்கு |
| | 84 | ஜே/339 | வரணி வடக்கு |
| | 85 | ஜே/343 | வரணி இயற்றாலை |
| | 86 | ஜே/346 | மந்துவில் மேற்கு |
| 12. கரவெட்டி | 87 | ஜே/355 | வல்வெட்டி |
| | 88 | ஜே/360 | கரணவாய் வடக்கு |
| | 89 | ஜே/361 | கரணவாய் வடக்கு, மேற்கு |
| | 90 | ஜே/363 | கரவெட்டி மேற்கு |
| | 91 | ஜே/366 | மத்தோணி |
| | 92 | ஜே/382 | கப்புது |
| 13. பருத்தித்துறை | 93 | ஜே/383 | தொண்டமனாறு தெற்கு |
| | 94 | ஜே/389 | வல்வெட்டித்துறை வடக்கு மத்தி |
| | 95 | ஜே/390 | வல்வெட்டித்துறைவடக்கு,கிழக்கு |
| | 96 | ஜே/392 | வல்வெட்டித்துறை தெற்கு, கிழக்கு |
| | 97 | ஜே/406 | கற்கோவளம் |
| | 98 | ஜே/407 | புலோலி வடக்கு |
| 14. மருதங்கேணி | 99 | ஜே/421 | பொற்பதி |
| | 100 | ஜே/422 | அம்பன் |
| | 101 | ஜே/423 | நாகர் கோவில் கிழக்கு |
| | 102 | ஜே/424 | நாகர்கோவில் மேற்கு |
| | 103 | ஜே/426 | செம்பியன்பற்று வடக்கு |
| | 104 | ஜே/427 | செம்பியன் பற்று தெற்கு |
| | 105 | ஜே/430 | உடுத்துறை |
| | 106 | ஜே/432 | வெற்றிலைக்கேணி |
| | 107 | ஜே/433 | முள்ளியான் |
| | 108 | ஜே/434 | போக்கறுப்பு |
| | 109 | ஜே/435 | சுண்டிக்குளம் |

## " ஆ " இணைப்பு

## II ஆம் தர கிராம அலுவலர் பதவிக்கு ஆட்சேர்புக்கான பரீட்சையின் பாட விதானம்

பரீட்சை 1 2/1 மணித்தியாலத்தில் விடை எழுதக் கூடிய ஓர் வினாதாளையுடையது. அவ்வினாக்களுக்கு பின்வருமாறு வினாக்கள் அடங்கும்.

1. மொழியும், கட்டுரையும்.
2. பொது அறிவு

## மாதிரி விண்ணப்பப்படிவம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராம அலுவலர் பதவிக்காக நடத்தப்படும்

### போட்டிப் பரீட்சை – 1991

கொடுக்கப்பட்டுள்ள சதுரத்தில் உரிய இலக்கத்தை இடுங்கள்

பிரதேச செயலாளர் பிரிவு பிரிவு இல.

விண்ணப்பிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவு

அதன் இல.

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:-
 ஆங்கிலத்தில்:-
 தமிழில்:
 முதலெழுத்துக்களுடன் பெயர்:-
 ஆங்கிலத்தில்:-
02. தபால் முகவரி:-
 ஆங்கிலத்தில்:-
 தமிழில்:-
03. ஆண்-பெண் பால்:- ஆண் 1.
 பெண் 2.
04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
 தமிழ் -
 ஆங்கிலம் -
05. நீர் ஒரு இலங்கைப் பிரசையா?
 பரம்பரையினாலா - 1
 பதிவின் மூலமா - 2
06. தேசியஇனம் -
 சிங்களம் -1 இலங்கைத் தமிழர் - 2
 முஸ்லீம் -3 இந்தியத் தமிழர் - 4
 மலே -5 வேறு - 6
07. பிறந்த திகதி -
 வருடம் - மாதம் - நாள் -
08. பிறந்த இடம் -
 மாவட்டம் - பிரதேச செயலாளர் பிரிவு -
 கிராம உத்தியோகத்தர் பிரிவு -
09. நீர் விண்ணப்பிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவரா?
 ஆம் -
 இல்லை -
10. அருகாமையிலுள்ள கிராம அலுவலர் பிரிவில்
 வதிவிடம் உள்ளவராயின் மாவட்டத்தின் பெயர் -
 கிராம அலுவலர் பிரிவு - இல.
11. க. பொ. த. (சா.த.), தே. பொ. த. ப. பரீட்சையில் பெறுபேறு பெற்ற பரீட்சையின் விவரம்-
 பரீட்சையின் பெயர் - வருடம்-
 பரீட்சையின் இல -

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

12. வேறு தகைமைகள்:-
13. நீர் எப்போதாவது அல்லது ஏதாவது குற்றத்திற்கு நீர் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீரா?
 ஆம், | இல்லை. -
 குற்றவாளியாக்கப்பட்டு இருந்தால் அதன் விவரம் தருக-
14. விண்ணப்பதாரியின் உறுதியுரை-
 (அ) விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விவரங்கள் உண்மையானதும், சரியானதும் என உறுதி கூறுகின்றேன்.
 (ஆ) என்னால் இதில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் பிழை என நிரூபிக்கப்பட்டால் நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தகுதியுடையவர் இல்லை எனவும், தேர்ந்தெடுக்கப்பட்டபின் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் உட்படுவேன் என்பதை நான் அறிவேன்.
 (இ) பரீட்சைக் கட்டணமாக ரூபா 100/- செலுத்தப்பட்டது.
 பற்றுச்சீட்டு இலக்கம்-
 செலுத்தப்பட்ட அலுவலகம்-
 (ஈ) நான் இப்பரீட்சையின் விதிகளுக்கு இணங்குவதற்கு ஒப்புக்கொள்கின்றேன்.
 திகதி: விண்ணப்பதாரியின் கையொப்பம்-
15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல்
 இவ் விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் .......... என்பவரை நன்கு அறிவேன் என்பதையும் அவர் 1991 ... ... திகதியில் என் முன்னிலையில் தன் கையொப்பத்தை வைத்தார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விண்ணப்பதாரி இத்திணைக்களத்தில் ........................ பதவி வகிக்கின்றார் எனவும் அவர் கிராம அலுவலராக நியமனம் பெறும் பட்சத்தில் இத்திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதையும், 1991 .... .... ஆம் திகதியில் என் முன்னிலையில் கையொப்பத்தை வைத்தார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்: அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்:
பதவி:-
விலாசம்:-
திகதி:-
பணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை இணையுங்கள், பற்றுச் சீட்டை ஒட்டுங்கள்

---

உ

ஸ்ரீராமஜெயம்

## விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் பிரசோற்பத்தி ஆவணி மீ 12 ஆம் திகதி [28-8-91] புதன்கிழமை சித்தயோகமும், உத்திரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் காலை 9-41 முதல் 10-53 வரையுள்ள துலாலக்ன சுபமுகூர்த்தத்தில்,

நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ பிக்ஷாடனக் குருக்கள் சோமசுந்தரக் குருக்களின் சிமந்த புத்திரி சௌபாக்கியவதி

**சீதாலக்ஷ்மியை**

நல்லூர் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் சுவாமிரெத்தின சர்மாவின் (முன்னாள் தபாலதிபர்) கனிஷ்ட குமாரன் சிரஞ்ஜீவி

**சுந்தரேச சர்மாவிற்கு**

(வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பிரதம குரு)

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்யதாரணம் செய்து கொடுப்பதால், நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள டிெ முகூர்த்தத்துக்கு வருகைதந்து தம்பதிகளை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வரவேற்பு : மணமகன் இல்லத்தில் 28-8-1991 புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு.

பி. சோமசுந்தரக்குருக்கள் தம்பதிகள்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

திருமதி பா. சுவாமிரெத்தினசர்மா குடும்பத்தினர்,
''சாந்தி'', தாவடி,
கொக்குவில்.

(இரு வீட்டார் அழைப்பு) (17963)

---

## அழைப்பாம்!

கொழும்பு, ஆக. 28

ஜனாதிபதி பிரேமதாசாவை காரைநகருக்கு விஜயம் செய்யுமாறு அங்குள்ள மக்கள் கேட்டுள்ளனராம்.

இப்படி ஈ. பி. டி. பி. தலைவரான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என்று கொழும்பு சிங்கள நாளிதழான ''தினமின'' செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

## வடக்கு...

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் பணிபுரியும் சிரேஷ்ட உயர் இராணுவ அதிகாரி ஒருவரை விசாரணை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக புலனாய்வாளர்கள் தெரிவித்தனர் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி இக்கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டது. [உ-எ]

## பிரான்ஸில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரிட்டனை விட்டுப் புறப்பட்டுச் சென்றார் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏதேனும் தெற்காசிய நாடு ஒன்றின் ஊடாக படகு மூலம் திரு. கிட்டு யாழ்ப்பாணம் வந்து சேருவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும்—

அவரைக் கண்டுபிடிப்பதற்காக கொழும்பு அதிகாரிகள் உஷார்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் அமிர்தலிங்கம்

[Chartered Surveyor, M.B A. London]

அத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் அமிர்தலிங்கம் 25-08-91 இல் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சி. சண்முகம், திருமதி மனோன்மணி சண்முகம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு திருமதி கந்தசாமி ஆகியோரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், பிருந்தாபனின் அன்புத் தந்தையுமாவார்

இவ்வறிவித்தலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மனோன்மணி
இல. 2 திருவள்ளுவர் சாலை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (17966)

### மு. அ. தம்பிஐயா

[லக்ஷ்மி ஸ்டோர்ஸ் - பொலநறுவ, சிவா அரிசி ஆலைநாவற்குழி]

கைதடி மு. அ. தம்பிஐயா காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற தெய்வானைப்பிள்ளை, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு கணவரும், இராசலட்சுமி சிவஞானப்பிரகாசம் [அவுஸ்திரேலியா], தர்மகுலசிங்கம் [சுவிஸ்], குமாரகுலசிங்கம் [பிரான்ஸ்], அகிலகுலசிங்கம் [லண்டன்], சுகந்தி, சிவதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வீரசிங்கம், சிவஞானப்பிரகாசத்தின் [அவுஸ்திரேலியா] மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [28-8-91] பிற்பகல் 2 மணிக்கு கைதடியில் நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்

[17680]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-08-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org